# திட்டப் பயனளாளர் வழிகாட்டி

லொகேடா (Locata) அறிமுகம் - மேற்கு லண்டனில் ஒரு புதிய இல்லம் கண்டறிய உதவுதல்

திட்டம் செயல்படும் முறை

நான் **Locata**-வில் உறுப்பினர் ஆவது எப்படி?

பயன்பெறுவதில் சமத்துவம் - எனக்கு என்ன உதவி கிடைக்கும்?

கவனிப்பு இல்லத்துக்கு நான் குடிபுக விரும்பினால் என்ன செய்வது?

எனக்கு மருத்துவ அல்லது உளஆரோக்கிய பிரச்சினை இருந்தால் என்ன செய்வது?

என் குடும்பத்தில் உள்ள எவருக்காவது நடமாடுவதில் சிரமம் இருப்பின் என்ன செய்வது?

என் சூழ்நிலைகள் மாற்றமடைந்தால் என்ன செய்வது?

நான் ஒரு இல்லத்தைத் தேர்வு செய்து கோருவது (**Bid**) எப்படி?

நான் கோரிய குடியிருப்பு பற்றிய பதிலை எப்படித் தெரிந்து கொள்வது?

ஒரு புதிய இல்லத்தைத் தேர்வு செய்து கோருவதில் ஐந்து கட்டங்கள்

வீட்டுவசதிக்காக வேறு என்ன வாய்ப்புகள் உள்ளன?

# **Locata** அறிமுகம் – மேற்கு லண்டனில் ஒரு புதிய இல்லம் கண்டறிய உதவுதல்

குடியிருப்பைத் தேடித் தேர்வு செய்வதற்கு ஈலிங் பேமிலி, பாரடைம் ஹவுசிங், பிசிஎச்ஏ, தேம்ஸ் வேல்லி, ஆக்டன் ஹவுசிங், ஷெஃபர்ட்ஸ் புஷ், ஸ்டேடியம் ஹவுசிங் அசோசியேஷன் ஆகிய குடியிருப்பு உரிமை அமைப்புகள் Locata திட்டத்தை எவ்வாறு பயன்படுத்தி வருகிறார்களா அதே போல பிரென்ட், ஈலிங், ஹாம்மர்ஸ்மித் அண்ட் ஃபுல்ஹாம், ஹார்ரோ, ஹில்லிங்டன், ஹவுன்ஸ்லோ கவுன்சில்ஸ் ஆகிய அமைப்புகளும் Locata திட்டத்தை இப்போது பயன்படுத்துகின்றன.

நீங்கள் எங்கே வசிக்க விரும்புகிறீர்கள் என்பதில் Locata அதிக வாய்ப்புகள் அளிக்கிறது. கடந்த காலத்தில் உங்களுக்கு எங்கே எப்போது குடியிருப்பு வழங்கப்படும் என்பதை உங்கள் கவுன்சில்தான் முடிவு செய்யும். இப்போது நீங்களே தேர்வு செய்ய வாய்ப்புக் கிடைக்கிறது.

கவுன்சில் மற்றும் குடியிருப்புச் சங்கங்களில் தற்போது குடியிருக்கும் வாடகைதாரர்கள், புதியதொரு இல்லத்துக்கு குடிமாற விரும்பினால் Locata-வின் மூலம் புதிய இல்லத்தைக் கண்டறியலாம். இந்த வசதி வீடு தேடுபவர்களுக்கும் – அதாவது, ஹவுசிங் ரெஜிஸ்டரின் காத்திருப்புப் பட்டியலில் இருப்பவர்கள் அல்லது வீடற்றவர்களுக்கும் கிடைக்கும்.

Locata பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை 'லொகேடா ஹோம்' (Locata HOME) என்றொரு இலவசப் பத்திரிகையை வெளியிடுகிறது; எல்லா கவுன்சில் மற்றும் குடியிருப்புச் சங்கங்களிலும் கிடைக்கும் இல்லங்கள் பற்றிய விவரங்கள் இதில் வெளியாகின்றன. இதில் வெளியாகும் விளம்பரங்களைப் பார்த்து, அதில் உள்ள ஏதேனும் ஒரு குடியிருப்புக்கு உங்கள் பெயரையும் பரிசீலிக்க வேண்டுமா என்பதை முடிவு செய்யலாம். குறிப்பிட்ட அந்தக் குடியிருப்பை நீங்கள் தேர்வு செய்து கோருவதன் (bid) மூலம் உங்கள் விருப்பத்தைத் தெரிவிக்கிறீர்கள். யார் யார் குடியிருப்பைக் கோர முடியும் என்பதைப் பற்றிய விவரங்கள் இந்த பயனாளர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ளன.

புதியதொரு குடியிருப்பைப் பெறுவதற்கு 'Locata HOME' இதழில் உள்ள ஏதேனும் ஒரு குடியிருப்பை நீங்கள் கோர வேண்டும். Locata திட்டத்தின்கீழ் வரும் கவுன்சில்களும் குடியிருப்புச் சங்கங்களும் தம்மிடம் காலியாக இருக்கும் சொத்துகளை, இனிமேல் Locata வாயிலாக கோராத எவருக்கும் ஒதுக்கீடு செய்ய மாட்டார்கள்.

நீங்கள் எங்கே வசிக்க விரும்புகிறீர்கள் என்று தேர்வு செய்ய, Locata உங்களுக்கு அதிக வாய்ப்புகள் வழங்குகிறது. உங்கள் பகுதியில் எந்தெந்த இல்லங்கள் கிடைக்கின்றன என்ற தகவலும் உங்களுக்குக் கிடைக்கிறது.

## திட்டம் செயல்படும் முறை

Locata திட்டம் இருப்பதால், உங்களுக்கு குடியிருப்பைக் கண்டுபிடித்து ஒதுக்கீடு செய்வது கவுன்சில் அல்லது குடியிருப்புச் சங்கங்கள் அல்ல; அதற்குப் பதிலாக, உங்களுக்கு வேண்டிய இல்லத்தை 'Locata HOME' பத்திரிகையிலிருந்து நீங்களே தேர்வு செய்யலாம்.

காலியாக இருக்கிற குடியிருப்புகள் விளம்பரம் செய்யப்படும்:

- பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வெளிவருகிற 'Locata HOME' என்னும் இலவசப் பத்திரிகையில் விளம்பரங்கள் வெளிவரும். 'Locata HOME' இதழ் பல இடங்களில் கிடைக்கிறது. Locata திட்டத்தில் வருகிற 6 பரோக்களிலும் உள்ள குடியிருப்புத்துறை அலுவலகங்கள், சமூக சேவை அலுவலகங்கள், தன்னார்வ நிறுவனங்கள், பொது நூலகங்கள் ஆகிய இடங்களில் கிடைக்கும். குறிப்பிட்ட தொகையை சந்தாவாகச் செலுத்தினால் உங்களுக்கு நேரடியாக அஞ்சலில் அனுப்ப முடியும்.

- எங்கள் இணையத்தளம்: www.locata.org

ஒவ்வொரு இதழிலும் வெளியாகும் விளம்பரங்களில், அதிகபட்சமாக ஏதேனும் மூன்று இல்லங்களை நீங்கள் தேர்வு செய்து கோரலாம். (இதற்காக உங்களுக்குத் தரப்படுகிற) படிவத்தை (கூப்பன்) பூர்த்தி செய்ய அனுப்ப வேண்டும்; அல்லது தொலைபேசி மூலம் கோரலாம், அல்லது எஸ்எம்எஸ் செய்தி வழியாக கோரலாம், Locata இணையத் தளத்தின் வாயிலாகவும் கோரலாம்.

புதிய உறுப்பினர்களுக்கு அவர்கள் திட்டத்தில் உறுப்பினராகச் சேர்ந்ததும் கூப்பன் உள்பட எல்லா தகவல்களும் அளிக்கப்படும்.

'Locata HOME' பின்வரும் விவரங்களை அளிக்கும்:

- கிடைக்கக்கூடிய இல்லங்கள்
- வார வாடகை எவ்வளவு
- உரிமையாளர் யார்
- யார் யார் அந்த இல்லத்தைக் கோரலாம்
- எப்போது தயாராகும்
- ஒரு பரோவிலிருந்து வேறு பரோ மாறி கோருவதற்கு அந்த இல்லம் கிடைக்குமா
- இல்லம் உள்ள பகுதி எது, அந்தப் பகுதி பற்றிய தகவல்கள்; உதாரணமாக, பள்ளிகள், போக்குவரத்து வசதி, கடைகள், இன்னபிற

உறுப்பினர்கள் வாடகைதாரர்களாகவோ (உள்ளூர் ஆணையத்தின் கூட்டாளி அமைப்பின் இல்லங்களில் வாடகைக்கு இருப்பவர்கள், அல்லது உள்ளூர் குடியிருப்புச் சங்கத்தில் வாடகைக்கு இருப்பவர்கள், இல்லம் தருவதாக உறுதியளிக்கப்பட்டவர்கள்) அல்லது குடியிருப்புத் தேடுபவர்களாகவோ இருப்பார்கள் (இவர்களில் வீடற்றவர்களும், ஹவுசிங் ரெஜிஸ்டரின் பட்டியலில் இடம் பெற்றவர்களும் இருப்பார்கள்).

எல்லா உறுப்பினர்களும் ஒரு குறிப்பிட்ட பிரிவில் (band) வைக்கப்படுவார்கள். நீங்கள் எங்கே பதிவு செய்து கொண்டீர்களோ அந்த உள்ளூர் ஆணையம் அல்லது நீங்கள் தற்போது இருக்கும் இல்லத்தின் உரிமையாளர், நீங்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர் என்று தெரிவிப்பார். ஒவ்வொரு பிரிவிலும், உறுப்பினர் சேர்ந்த தேதியைப் பொறுத்தே முன்னுரிமை தரப்படும்.

**ஒவ்வொரு பிரிவைப் பற்றிய விவரங்களும் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இதில் எல்லா வகையான பிரிவுகளும் தரப்படவில்லை; இந்தத் திட்டம் உங்கள் விஷயத்தில் எவ்வாறு செயல்படும் என்று மேலும் தகவல்கள் பெற விரும்பினால், நீங்கள் பதிவு செய்து கொண்ட குடியிருப்புத் துறையிடம் பேசவும்.**

பிரிவு ஏ (எமர்ஜென்சி/உச்ச முன்னுரிமை)

- நீங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய நோய்க்கு ஆளானவர் - தற்போது இருக்கிற குடியிருப்பு உங்கள் நோயை பெரிதும் பாதித்திருக்கிறது; அல்லது வேறு அவசர காரணங்களால் குடியிருப்பை மாற்ற வேண்டியிருப்பவர்.
- நீங்கள் வீடற்றவர், உடனடியாக குடியிருப்பு தேவைப்படுபவர், நீங்கள் வசிக்கும் தற்காலிகக் குடியிருப்பின் உரிமையாளர் அந்த இல்லத்தைக் காலி செய்து தருமாறு கேட்கிறார், அல்லது தற்காலிகக் குடியிருப்பு உங்களுக்கு ஏற்றதாக இல்லை என்பதுடன் வேறு தற்காலிகக் குடியிருப்பையும் உங்களால் கண்டறிய முடியவில்லை.
- உங்களுடைய சிறப்புத் தேவைகளுக்கு உகந்தவாறு நிரந்தரக் குடியிருப்பு வழங்கப்பட வேண்டும் என்று சமூக சேவைத் துறை அளித்த பரிந்துரையை குடியிருப்புத்துறை ஏற்றுக் கொண்டிருக்கிறது.
- நீங்கள் தற்போது குடியிருக்கும் இல்லத்தில் வசிப்பதால் வன்முறையின் காரணமாக உங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது - இந்த விதி கவுன்சில்/குடியிருப்புச் சங்கங்களின் வாடகைதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும்.
- நீங்கள் ராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற வாடகைதாரர், உங்களுக்கு மறுகுடியிருப்பு ஏற்பாடு செய்வது ஒப்பந்தப்படி கவுன்சிலின் கடமையாக இருக்கிறது.
- உங்கள் தற்போதைய குடியிருப்பு இடிக்கப்பட உள்ளது அல்லது புதுப்பிக்கப்பட உள்ளது என்பதால் குடியிருப்பை மாற்ற வேண்டிய நிலையில் உள்ளவர்.
- நீங்கள் ஒரு வாடகைதாரர், இப்போது உங்களுக்கு உகந்தவாறு அமைக்கப்பட்ட குடியிருப்புக்கு மாற விரும்புபவர்.
- நீங்கள் தற்போது உங்களுக்கு உகந்தவாறு அமைக்கப்பட்ட குடியிருப்பில் வாடகைதாரராக இருக்கிறீர்கள். உங்களுக்கு இப்போது அது தேவையில்லை என்பதால் வேறு எவரேனும் அதைப் பயன்படுத்த இயலும்.
- இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட படுக்கையறைகள் கொண்ட வீட்டில் வாடகைதாரராக இருக்கிற நீங்கள்; ஒரு படுக்கையறை கொண்ட வீட்டுக்கு மாற விரும்புகிறீர்கள் அல்லது இரண்டு படுக்கையறைகளை விட்டுக்கொடுக்கிறீர்கள்.
- கவுன்சில் குடியிருப்பில் வாடகைதாரராக இருப்பவரின் வாரிசாகிய நீங்கள் ஒற்றையறைக் குடியிருப்பு (ஸ்டுடியோ) அல்லது ஒற்றைப் படுக்கையறை வீட்டிற்கு மாறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது அல்லது நீங்கள் இரண்டு படுக்கையறைகளை விட்டுக்கொடுக்கிறீர்கள்.
- நீங்கள் தற்போது வசிக்கும் குடியிருப்புக் கட்டடம் கட்டாயக் கையகப்படுத்தல் ஆணைக்கு உள்பட்டது மற்றும்/அல்லது உங்களை வேறு இல்லத்துக்கு மாற்ற வேண்டிய கட்டாயக் கடமை கவுன்சிலுக்கு உள்ளது.

பிரிவு பி (அவசரமாக மாற வேண்டிய தேவை)

- மருத்துவ அல்லது சமுதாயக் காரணங்களுக்காக அவசரமாக வீடு மாற வேண்டிய தேவை உள்ளவர், உங்கள் இல்ல உரிமையாளரால் அனுமதிக்கப்பட்டவர்.
- துன்புறுத்தல் அல்லது வன்முறை அச்சுறுத்தல் காரணமாக வேறு இடத்திற்கு மாற வேண்டிய தேவை உள்ளவர் (இந்த விதி கவுன்சில்/குடியிருப்புச் சங்கங்களின் வாடகைதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும்).
- நீங்கள் தற்போது சிற்றுண்டி மற்றும் படுக்கை தரும் இல்லத்தில் அல்லது ஒரு விடுதியில் அல்லது நண்பர்களின் இல்லத்தில் குடியிருக்கிறீர்கள்; வீடற்றவராக இருக்கிற உங்களுக்கு மறுகுடியிருப்பு ஏற்பாடு செய்வதை தனது கடமை என்று கவுன்சில் ஒப்புக் கொண்டுள்ளது.

- நீங்கள் எதிலும் வாடகைதாரராக இல்லை; ஒரு குழந்தை உங்களைச் சார்ந்திருக்கிறது, தனி படுக்கையறை இல்லை, மற்ற வசதிகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கிறீர்கள்.
- ஆதரவு மற்றும் கவனிப்பு இல்லத்திலிருந்து மாற விரும்புகிறீர்கள்; சிறப்பு ஒதுக்கீட்டுத் திட்டத்தின்கீழ் உங்களுக்கு மறுகுடியிருப்பு வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.
- நீங்கள் தற்போது பெரியதொரு வீட்டில் வாடகைதாரராக இருக்கிறீர்கள்; அதிகப்படி படுக்கையறைகளை கொடுக்க விரும்புகிறீர்கள்; ஆயினும் உங்களுக்கு இரண்டு அல்லது அதற்கும் அதிக படுக்கையறைகள் தேவைப்படுகின்றன.
- நீங்கள் வாடகைதாரராக இருக்கும் இல்லம் இடிக்கப்பட இருக்கிறது, அல்லது குடியிருப்பில் தங்கியிருக்கும் ஆட்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது அல்லது வேறு நிர்வாகக் காரணங்களுக்காக நீங்கள் வேறு வீட்டுக்கு மாற வேண்டியவர் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.
- நீங்கள் கவுன்சில் குடியிருப்பில் வாடகைதாரராக இருக்கும் ஒருவரின் வாரிசு. இரண்டு அல்லது அதற்கும் அதிக படுக்கையறைகள் கொண்ட சிறியதொரு குடியிருப்புக்கு மாற்றப்பட வேண்டும் என்று கவுன்சிலால் ஒப்புக்கொள்ளப்பட்டவர்.
- நீங்கள் கவுன்சிலின் முன்னாள் வாடகைதாரர்; முன்னர் இருந்த குடியிருப்பைக் கைவிடும்போது உங்களுக்கு மறுகுடியிருப்பு ஏற்பாடு செய்வது என்று கவுன்சில் உறுதியளித்திருந்தது.

பிரிவு சி (குடியிருப்புத் தேவை உள்ளவர்கள் என அறியப்பட்டவர்கள்)

- மருத்துவக் காரணங்களுக்காகவோ அல்லது வீட்டின் சுகாதாரமின்மை அல்லது அதிக ஆட்கள் போன்ற காரணங்களால் குடியிருப்பின் நிலைமை திருப்திகரமாக இல்லை என்பதாலோ குடியிருப்பு மாற வேண்டியவர்கள்.
- சமூக சேவைத்துறையின் கவனிப்புத் திட்டத்தின்கீழ் உங்கள் குடியிருப்புத் தேவை ஒப்புக்கொள்ளப்பட்டது அல்லது சமுதாய சிரமங்களிலிருந்து விடுவிப்பதற்கான ஒரு வழியாக சமூக சேவைத்துறை வீடு மாற்றித்தர ஒப்புக்கொண்டுள்ளது.
- நீங்கள் வயது முதிர்ந்த ஒருவர், கவனிப்பு இல்லத்திற்கு மாற விரும்புபவர்.
- நீங்கள் வீடற்றவர், ஆயினும் ஏ மற்றும் பி பிரிவுகளின்கீழ் வரத் தகுதியற்றவர்.

பிரிவு டி

- மேற்குறிப்பிட்ட ஏ, பி, சி ஆகிய பிரிவுகளின்கீழ் வராத மற்ற எல்லா வீடற்றவர்களும், குடியிருப்பு மாற்ற வேண்டிய வாடகைதாரர்களும்.

## நான் **Locata**-வில் உறுப்பினர் ஆவது எப்படி?

திட்டத்தின் கூட்டாளியாக இருக்கும் எந்தவொரு உரிமையாளரிடமும் நீங்கள் வாடகைதாரராக இருந்து, மாற்றத்துக்காகப் பதிவு செய்து கொண்டிருந்தாலும்; அல்லது நீங்கள் வீடற்றவராகவும் கூட்டாளி கவுன்சில்களில் ஏதேனுமொன்றின் ஹவுசிங் ரெஜிஸ்டரில் பதிவு செய்து கொண்டவராகவும் இருந்தால் தானாகவே Locata-வின் உறுப்பினர் ஆகிவிடுகிறீர்கள்.

மற்றவர்கள் தமது குடியிருப்பு உரிமையாளர்கள் மூலமாகவோ அல்லது உள்ளூர் கவுன்சிலின் குடியிருப்புத் துறையின் மூலமாகவோ பதிவு செய்ய வேண்டும்.

## பயன்பெறுவதில் சமத்துவம் – எனக்கு என்ன உதவி கிடைக்கும்?

நன்கு பயிற்சி பெற்ற குடியிருப்புத்துறை ஊழியர்கள், சமூக சேவகர்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் ஆகியோர் பாதிக்கப்படக்கூடிய விண்ணப்பதாரர்களுக்கும், மொழிப் பிரச்சினையோ அல்லது படிப்பதில் சிரமங்களோ இருப்பவர்களுக்கும் ஆலோசனை அளிக்கக் காத்திருக்கிறார்கள். **'Locata HOME'** பயன்படுத்தி எவ்வாறு ஒரு இல்லத்தைக் கண்டறியலம் என்று அறிய இவர்கள் உதவி செய்வார்கள்.

மறுகுடியிருப்புப் பெறுவதற்கு அனைவரும் **'Locata HOME'**தான் பயன்படுத்தியாக வேண்டும். கிடைக்கிற இல்லங்களுக்கு நீங்கள் கோரிக்கை விடுக்கவில்லை (பிட் செய்யவில்லை) என்றால், உங்களுக்கு நேரடியாக வாய்ப்பு எதுவும் வழங்கப்படாது.

## கவனிப்பு இல்லத்திற்கு நான் மாற விரும்பினால் என்ன செய்வது?

கவனிப்பு இல்லம் என்பது குறிப்பிட்ட நோக்கத்துக்காக கட்டப்பட்ட குடியிருப்பாகும்; இது தனியாக இருக்கிற வயது முதிர்ந்த நபர்களுக்கும், தமது நேரத்தைத் தனியாகவே கழிக்க முடிகிறவர்களுக்கும் சிறப்பாக உருவாக்கப்பட்டது. பெரும்பாலான கவனிப்புத் திட்டங்களில் ஒரு வார்டனோ அல்லது நிர்வாகியோ இருப்பார்; அவர் உதவியும் ஆலோசனையும் அளிப்பார். கவனிப்பு இல்லத்திற்கு கோர வேண்டுமானால், நீங்கள் கவனிப்பு இல்லத்திற்கு தேர்வு பெற தகுதியுடையவராக இருக்க வேண்டும். உங்களுக்குத் தகுதி உள்ளதா என்று பார்க்கவும், அளிக்கப்படுகிற வாய்ப்பு (ஆஃபர்) என்றால் என்ன என்று அறியவும் உங்கள் உரிமையாளர் அல்லது குடியிருப்புத் துறையுடன் தொடர்பு கொள்ளவும்.

## எனக்கு மருத்துவ அல்லது உளஆரோக்கிய பிரச்சினை இருந்தால் என்ன செய்வது?

உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்களில் எவருக்காவது மருத்துவ அல்லது மனஆரோக்கியப் பிரச்சினை இருந்தால், அல்லது வேறு வகை சிறப்புத் தேவை உள்ளவராக இருந்தால், நீங்கள் ஒரு மருத்துவ சுய-மதிப்பீட்டுப் படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்ய வேண்டும். இது உங்கள் நோயின் நிலைமையைப் பற்றியும், தற்போதைய இல்லம் அந்த நோயை எவ்வாறு தீவிரப்படுத்துகிறது என்பதையும், நீங்கள் ஏன் இல்லம் மாற வேண்டும் என்பதையும் கேட்கும். உங்கள் மருத்துவரிடமிருந்து சான்றிதழ் பெற்றாக வேண்டும் என்ற கட்டாயமில்லை. உங்கள் விண்ணப்பத்தை எமது மருத்துவ ஆலோசகர் பரிசீலித்துப்பார்த்து, உங்களுக்கு மறுகுடியிருப்பு வழங்குவதால் பயன் ஏதும் கிடைக்குமா என்பதையும், எவ்வளவு விரைவாக நீங்கள் வீடு மாற வேண்டும் என்பதையும் முடிவு செய்வார்.

## என் குடும்பத்தில் உள்ள எவருக்காவது நடமாடுவதில் சிரமம் இருப்பின் என்ன செய்வது?

மருத்துவ சுயமதிப்பீட்டுப் படிவத்தைப் பூர்த்தி செய்த பிறகு, உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்பத்தில் உள்ள எவருக்காவது நடமாடுவதில் சிரமங்கள் உள்ளதா என்று கேட்கப்படும். அதாவது, நாங்கள் வழங்கக்கூடிய குடியிருப்பு உங்களுக்கு உகந்ததாக இல்லாத வகையில், உங்களுக்கு நடப்பதில் அல்லது மாடிப்படி ஏறுவதில் சிரமங்கள் உள்ளனவா என்று

கேட்கப்படும். உதாரணமாக, உங்கள் குடும்பத்தில் உள்ள ஒரு உறுப்பினர் எவரேனும் சக்கர நாற்காலியைப் பயன்படுத்துபவர் என்றால், குடும்பத்தினரின் தேவையைப் பற்றி நேரில் கண்டறிந்து மதிப்பிடுவதற்கு ஒரு உடலியக்க மருத்துவர் ஒருவரை அனுப்பும்.

உங்களுக்கு உகந்த இல்லம் தரப்பட வேண்டிய தேவை இருப்பதாக முடிவு செய்யப்பட்டால், நீங்கள் பின்வரும் ஏதேனும் ஒரு பிரிவில் சேர்க்கப்படுவீர்கள்:

- மொபிலிடி குரூப் 1 – வீட்டுக்கு உள்ளும் வெளியிலும் சக்கர நாற்காலி பயன்படுத்துபவர்கள்.
- மொபிலிடி குரூப் 2 – படிகளில் ஏற இறங்க இயலாதவர் மற்றும் சில நேரங்களில் சக்கர நாற்காலியைப் பயன்படுத்துபவர்கள்.
- மொபிலிடி குரூப் 3 – 1 அல்லது 2 படிகள் மட்டுமே ஏற இறங்க இயலக்கூடியவர்கள்.

உங்கள் மொபிலிடி குரூப்பில் உள்ளவர்களுக்குப் பொருத்தமான குடியிருப்புகள், விளம்பரங்களில் தனியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்; இத்தகைய குடியிருப்புகளை வழங்குவதற்கான முன்னுரிமை அந்தந்த மொபிலிடி குரூப்பில் உள்ளவர்களுக்கே வழங்கப்படும்.

## என் சூழ்நிலைகள் மாற்றமடைந்தால் என்ன செய்வது?

உங்கள் குடும்பத்தினர், ஆரோக்கிய நிலைமை அல்லது குடியிருப்பு நிலைமையில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் உங்கள் கவுன்சில்/குடியிருப்புச் சங்கத்துக்கு அவ்வப்போது தெரிவிக்க வேண்டும். இது மிகவும் அவசியம். ஏனெனில், உங்களை வகைப்படுத்திய பிரிவு அல்லது குறிப்பிட்ட சில குடியிருப்புகள் உங்களுக்குக் கிடைப்பதற்கான தகுதி ஆகியவற்றை இவை மாற்றக்கூடும்.

## நான் ஒரு இல்லத்தைத் தேர்வு செய்து கோருவது எப்படி?

'Locata HOME' இதழ் ஒவ்வொன்றிலும் வெளியாகிற விளம்பரங்களில் ஏதேனும் மூன்று குடியிருப்புகளுக்கு நீங்கள் கோரிக்கை விடுக்கலாம்; இதை ஒரு கூப்பன் அல்லது தொலைபேசி அல்லது எஸ்எம்எஸ் மெசேஜ் வாயிலாகச் செய்யலாம். இணையத்தளத்தில் உள்ள 'மேக் யுவர் பிட்' (Make your bid) என்ற பக்கத்தின் வழியாகவும் கோரலாம். கிடைத்த கோரிக்கைகள் அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து, விண்ணப்பதாரர் குறிப்பிட்ட குடியிருப்புக்குத் தகுதி உடையவர்தானா என்பதை Locata பரிசீலனை செய்யும். பின்னர், தகுதியுடைய விண்ணப்பதாரர்களை முன்னுரிமைப்படி வரிசைப்படுத்தி, தேர்வுசெய்யப்பட்ட பட்டியலை உரிமையாளருக்கு அனுப்பும்.

## இணையத் தளத்தின் வாயிலாக கோருதல்

| | | |
|---|---|---|
| 1 | இன்டர்நெட் ப்ரவுசரைத் திறந்து இந்த இணையத்திற்குச் செல்லவும்: | **www.locata.org** |
| 2 | ‘லாக்இன்’ (login) என்ற இணைப்பில் கிளிக் செய்க | இது உங்களை லாக்இன் திரைக்குக் கொண்டு செல்லும் |
| 3 | உங்கள் பரோவுக்கு உரிய 3 எழுத்து சுருக்கக் குறியீட்டை தேர்வு செய்க. பின்னர் உங்கள் Locata அடையாள எண்ணை (லின் - LIN) உள்ளிடுக: | உதாரணம்: நீங்கள் ஈலிங் (Ealing) உறுப்பினர், உங்கள் அடையாள எண் EAL 12345 என்று வைத்துக் கொள்வோம்; நீங்கள் பட்டியலில் “EAL” என்பதைத் தேர்வு செய்ய வேண்டும்; பின்னர், அதையொட்டி இருக்கும் காலியிடத்தில் “12345” என்ற எண்களை உள்ளிட வேண்டும். |
| 4 | கொடுக்கப்பட்ட இடத்தில் உங்கள் பிறந்த தேதியை உள்ளிடவும் | உதாரணம்: 31 Jan 1960 |
| 5 | இது உங்களை உறுப்பினர்களின் பக்கத்திற்குக் கொண்டு செல்லும். இங்கே குடியிருப்புகளைத் தேடலாம். இலவசமாகக் கிடைக்கிற கூப்பனை டௌன்லோட் செய்து குடியிருப்புக்கு கோரிக்கை விடுக்கலாம். கோரிக்கையை சமர்ப்பிக்க என்ற ‘Bid for properties’ இணைப்பில் கிளிக் செய்யவும். | இது உங்களை ‘பிட்’ செய்யும் பக்கத்திற்கு இட்டுச்செல்லும். |
| 6 | நீங்கள் தேர்வு செய்த குடியிருப்புகளை கோருவதற்கு, அந்தந்த குடியிருப்புக்குக் கொடுக்கப்பட்ட மூன்று இலக்க எண்களை, ‘Bid 1’, ‘Bid 2’ and ‘Bid 3’ என்ற பெட்டிக்கு அருகே உள்ள காலியிடத்தில் உள்ளீடு செய்யவும். | உதாரணம்: 428, 387, 621 ஆகிய மூன்று குடியிருப்புகளுக்கு நீங்கள் கோருகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம்.‘Bid 1’ என்ற இடத்தில் “428” என்றும், ‘Bid 2’ இன்ற இடத்தில் “387” என்றும், கடைசியாக உள்ள ‘Bid 3’ என்ற இடத்தில் “621” என்றும் தட்டச்சு செய்ய வேண்டும். |
| 7 | ‘Submit Bids’ என்ற கட்டத்தின்மீது கிளிக் செய்யவும். | |
| அவ்வளவுதான்; நீங்கள் கோரிக்கை செய்து முடித்தாயிற்று. | | |

# எஸ்எம்எஸ் செய்திகளின் வாயிலாக கோருதல்

| | செய்ய வேண்டியது | உதாரணம் |
|---|---|---|
| 1 | உங்கள் கோரிக்கைகளை செய்யத் துவங்குதல்: | புதிய மெசேஜ் திறந்து கொள்ளவும். |
| 2 | உங்கள் லின் (LIN) அடையாள எண்ணை உள்ளீடு செய்யவும்: | BRE12345 |
| 3 | அதைத் தொடர்ந்து இடைவெளிக் குறியை (hash mark) அழுத்தவும். | BRE12345# |
| 4 | இப்போது, முதல் கோரலுக்காக, விளம்பரத்தில் வெளியான குடியிருப்பின் எண்ணை உள்ளீடு செய்ய வேண்டும், அதை அடுத்து மீண்டும் இடைவெளிக் குறியை அழுத்த வேண்டும். | BRE12345#456# |
| கோருவதை முடித்து விட்டிருந்தால் மெசேஜை அனுப்பவும். அல்லது கீழே தரப்பட்டுள்ள செய்முறைகளைப் பின்பற்றவும். | | |
| 5 | உங்கள் 2ஆவது கோரலுக்கு உரிய எண்ணைத் தொடர்ந்து உள்ளீடு செய்யவும்; அதை அடுத்து இடைவெளிக்குறியை அழுத்தவும். | BRE12345#456#491# |
| கோருவதை முடித்து விட்டிருந்தால் மெசேஜை அனுப்பவும். அல்லது கீழே தரப்பட்டுள்ள செய்முறைகளைப் பின்பற்றவும். | | |
| 6 | உங்கள் 3ஆவது கோரலுக்கு உரிய விளரம்பர எண்ணைத் தொடர்ந்து உள்ளீடு செய்யவும்; அதை அடுத்து இடைவெளிக்குறியை அழுத்தவும். | BRE12345#456#491#444# |
| 7 | நீங்கள் தேர்வு செய்த எல்லா குடியிருப்புகளுக்கும் கோரிக்கை செய்து விட்டீர்கள் என்றால், அந்த மெசேஜை அனுப்பி விடவும். | "Send" |
| 8 | உங்கள் கோரிக்கைகளை அனுப்ப வேண்டிய தொலைபேசி எண்: | **07800 140767** |

- பெரும்பாலான மொபைல் போன் நிறுவனங்கள், ஒவ்வொரு எஸ்எம்எஸ் செய்திக்கும் சுமார் 10 பென்னி கட்டணம் வசூலிக்கின்றன
- எண்களை உள்ளீடு செய்வதற்கு, தொடர்ந்து அந்தப் பொத்தானை அழுத்திக்கொண்டே இருந்தால் எழுத்துகள் முடிந்தபின் எண் தோன்றும்.
- பெரும்பாலான மொபைல் தொலைபேசிக் கருவிகளில், முதலில் நட்சத்திரக் குறியையும் பிறகு இடைவெளிக் குறியையும் அழுத்தினால் 'இடைவெளிக் குறி' தோன்றும்.
- உங்கள் கோரல்களை சிறிய எழுத்துகள் அல்லது பெரிய எழுத்துகளில் அனுப்பலாம்.
- அனுப்புவதற்கு முன் உங்கள் 'லின்' (LIN) அடையாள எண் மற்றும் பிட் செய்த குடியிருப்புகளின் எண்கள் சரியாக உள்ளதா என்று சரிபார்த்துக்கொள்ளவும்.

## <u>தொலைபேசி வாயிலாகக் கோருதல்</u>

| | செயல் | உதாரணம் |
|---|---|---|
| 1 | கோரிக்கை விடுக்கத் தொடங்குவதற்கு இந்த எண்ணை டயல் செய்யவும்: | **0906 294 2012** |
| 2 | உங்களுக்கு இந்த வாசகங்கள் ஒலிக்கும்: | "Welcome to the Locata Property Line, Please select the Borough or RSL you are registered with from the following list." (லொகேடா பிராபர்ட்டி லைன் உங்களை வரவேற்கிறது. அடுத்து வருகிற பட்டியலில் இருந்து நீங்கள் பதிவு செய்து கொண்டுள்ள பரோ அல்லது ஆர்எஸ்எல் எண்ணை தேர்வு செய்யவும்) |
| | 1-ஐ அழுத்துக<br>2-ஐ அழுத்துக<br>3-ஐ அழுத்துக<br>4-ஐ அழுத்துக<br>5-ஐ அழுத்துக<br>6-ஐ அழுத்துக<br>7-ஐ அழுத்துக | For Brent (பிரெண்ட்)<br>For Ealing (ஈலிங்)<br>For Harrow (ஹார்ரோ)<br>For Hillingdon (ஹில்லிங்டன்)<br>For Hounslow (ஹவுன்ஸ்லோ)<br>For Ealing Family Housing Association (ஈலிங் ஃபேமிலி ஹவுசிங் அசோசியேஷன்)<br>For PCHA (பிசிஎச்ஏ) |
| 3 | இந்த வாசகம் ஒலிக்கும்: | "Thank you. Please enter the number section of your LIN number." (நன்றி. தயவு செய்து உங்கள் லின் அடையாள எண்ணை அழுத்தவும்) |
| 4 | இப்போது உங்கள் 'லின்' (LIN) அடையாள எண்களை மட்டுமே அழுத்த வேண்டும். சரியான எண்களை அழுத்தியதும் இந்த வாசகம் ஒலிக்கும்: | "Thank you. Please enter the day number of your birth date" (நன்றி. உங்கள் பிறந்த தேதிக்கு உரிய எண்களை அழுத்தவும்)<br>உதாரணம்.<br>16/04/60 என்றால் 16 என்பது உங்கள் பிறந்த நாள்<br>08/01/58 என்றால் 08 என்பது உங்கள் பிறந்த நாள் (ஒற்றை இலக்க எண்ணாக இருந்தால் முதலில் 0 சேர்க்கவும்.<br>23/06/31 என்றால் உங்கள் பிறந்த நாள் 23 |
| 5 | இப்போது நீங்கள் பிறந்த நாளுக்குரிய எண்ணை அழுத்த வேண்டும். சரியான எண்களை அழுத்தியதும் இந்த வாசகம் ஒலிக்கும்: | "Thank you. Please enter your first property reference bid number." (நன்றி. தயவு செய்து முதலாவதாகத் தேர்வு செய்த குடியிருப்புக்கு உரிய எண்களை அழுத்துக) |
| 6 | முதலாவதாகத் தேர்வு செய்த குடியிருப்புக்கான எண்ணை சரியாக அழுத்தியதும் பின்வரும் வாசகம் ஒலிக்கும்: | "Thank you. If you would like to add an additional bid press 1 or press 2 to complete your bids." (நன்றி. இன்னொரு குடியிருப்பைக் கோர நீங்கள் விரும்பினால் 1-ஐ அழுத்துக. அல்லது கோருவதை முடிக்க விரும்பினால் 2-ஐ அழுத்துக) |
| 7 | நீங்கள் 1-ஐ அழுத்தியிருந்தால், இந்த வாசகம் ஒலிக்கும்: | "Please enter your second property bid number or press the * key to complete your bidding." (உங்கள் இரண்டாவது தேர்வுக் குடியிருப்புக்கான எண்களை அழுத்துக; அல்லது கோருவதை முடிப்பதற்கு * குறியை அழுத்துக) |

<table>
<tr><td>8</td><td>இரண்டாவதாகத் தேர்வு செய்த குடியிருப்புக்கான எண்ணை சரியாக அழுத்தியதும் பின்வரும் வாசகம் ஒலிக்கும்:</td><td>“If you would like to add an additional bid, please press 1 now or press 2 to complete your bidding.” (இன்னொரு குடியிருப்பைக் கோர நீங்கள் விரும்பினால் 1-ஐ அழுத்துக. அல்லது கோருவதை முடிக்க விரும்பினால் 2-ஐ அழுத்துக)</td></tr>
<tr><td>9</td><td>கோரிக்கை விடுப்பதை முடித்து விட்டதும் பின்வரும் வாசகம் ஒலிக்கும்:</td><td>“Thank you for bidding on the Locata Property line.” (லொகேடா பிராபர்ட்டி லைனில் ‘பிட்’ செய்தமைக்காக நன்றி)</td></tr>
<tr><td colspan="3">இதில் ஏதேனும் தவறு செய்திருந்தால் பின்வரும் செய்திகள் ஒலிக்கும்:</td></tr>
<tr><td>10</td><td>உங்கள் அடையாள எண்ணில் ஏதேனும் தவறு செய்திருந்தால் இந்த வாசகம் ஒலிக்கும்:</td><td>“I am sorry, the LIN number you have entered is not recognised. Please try again.” (வருந்துகிறேன். நீங்கள் உள்ளிட்ட அடையாள எண் ஏற்கப்படவில்லை. தயவுசெய்து மறுபடியும் முயற்சி செய்யவும்)</td></tr>
<tr><td colspan="3">இப்போது எண்கள் சரியாக உள்ளதா என்று சரிபார்த்துக் கொண்டு அடையாள எண்ணை மறுபடியும் அழுத்துங்கள்.</td></tr>
<tr><td>11</td><td>மீண்டும் தவறு செய்தால் பின்வரும் வாசகம் ஒலிக்கும்:</td><td>“I am sorry, the LIN number you have entered is not found. Please check with your registering partner and call again.” (மன்னிக்கவும். நீங்கள் உள்ளிட்ட அடையாள எண் ஏதும் கிடைக்கவில்லை. தயவுசெய்து நீங்கள் பதிவு செய்த கூட்டாளி அமைப்பிடம் சரிபார்த்துக் கொண்டு மீண்டும் அழைக்கவும்)</td></tr>
</table>

## கூப்பன் வாயிலாகக் கோருதல்

| | |
|---|---|
| உங்கள் கூப்பனில் உங்கள் பெயரும் ‘லின்’ எண்ணும் (லொகேடா அடையாள எண்) அச்சிடப்பட்டு இருக்கும் – இந்த விவரங்கள் சரியாக உள்ளதா என்று சரிபார்த்துக்கொள்ளவும். | குடியிருப்பு எண்ணின் இரண்டாவது இலக்கத்துக்கு, இரண்டாவது வரிசையில் உள்ள கட்டத்தில் பெருக்கல் குறியிட வேண்டும். |
| ஒவ்வொரு இதழிலும் வருகிற இலவசக் கூப்பனில் அதிகபட்சம் மூன்று குடியிருப்புகள் வரை நீங்கள் கோரலாம். | குடியிருப்பு எண்ணின் மூன்றாவது இலக்கத்துக்கு, மூன்றாவது வரிசையில் உள்ள கட்டத்தில் பெருக்கல் குறியிட வேண்டும். |
| ‘Locata HOME’ இதழில் விளம்பரமாக வெளியாகிற ஒவ்வொரு குடியிருப்புக்கும் 3 இலக்க எண் தரப்பட்டிருக்கும். | எந்த இதழில் வெளியான விளம்பரங்களுக்கு நீங்கள் பிட் செய்கிறீர்களோ அந்த ‘Locata HOME’ இலவசக் கூப்பனில் உள்ள தேதியைக் குறிப்பிட வேண்டும். |
| உதாரணமாக, 456, 491, 444 என்ற 3 இலக்க எண்கள் கொண்ட குடியிருப்புகளை நீங்கள் கோர விரும்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். பக்கத்தில் தரப்பட்டுள்ள படத்தில் காட்டி இருப்பது போல கூப்பனில் பெருக்கல் (X) குறியிட வேண்டும். அதாவது, முதல் இலக்கத்துக்கு முதல் வரிசையில் பெருக்கல் குறியிட வேண்டும், | பூர்த்தி செய்த கூப்பனை Locata-க்கு அஞ்சல் வாயிலாக திருப்பி அனுப்புங்கள். Locata முகவரி கூப்பனில் உள்ளது. இருப்பினும் இதில் உரிய அஞ்சல் தலை ஒட்டி அனுப்ப வேண்டும். |



<u>தொலைபேசி வாயிலாக கூப்பன் அனுப்பக் கோருதல்</u>

| | | |
|---|---|---|
| 1 | கூப்பனுக்கு ஆர்டர் தர இந்த தொலைபேசி எண்ணை டயல் செய்க: | **0906 294 2013** |
| 2 | இந்த வாசகங்கள் ஒலிக்கும்:<br><br>1-ஐ அழுத்துக<br>2-ஐ அழுத்துக<br>3-ஐ அழுத்துக<br>4-ஐ அழுத்துக<br>5-ஐ அழுத்துக<br>6-ஐ அழுத்துக<br><br>7-ஐ அழுத்துக | "Welcome to the Locata Property Line, Please select the Borough or RSL you are registered with from the following list."<br>(லொகேடா பிராபர்ட்டி லைன் உங்களை வரவேற்கிறது. அடுத்து வருகிற பட்டியலில் இருந்து நீங்கள் பதிவு செய்து கொண்டுள்ள பரோ அல்லது ஆர்எஸ்எல் எண்ணை தேர்வு செய்யவும்)<br>For Brent (பிரெண்ட்)<br>For Ealing (ஈலிங்)<br>For Harrow (ஹார்ரோ(<br>For Hillingdon (ஹில்லிங்டன்)<br>For Hounslow (ஹவுன்ஸ்லோ)<br>For Ealing Family Housing Association (ஈலிங் ஃபேமிலி ஹவுசிங் அசோசியேஷன்)<br>For PCHA (பிசிஎச்ஏ) |
| 3 | இப்போது இந்த வாசகம் ஒலிக்கும்: | "Thank you. Please enter the number section of your LIN number."<br>(நன்றி. தயவு செய்து உங்கள் லின் அடையாள எண்ணை அழுத்தவும்) |
| 4 | இப்போது உங்கள் லின் அடையாள எண்களை மட்டுமே அழுத்த வேண்டும். சரியான எண்களை அழுத்தியதும் இந்த வாசகம் ஒலிக்கும்: | "Thank you. Please enter the day number of your birth date" (நன்றி. உங்கள் பிறந்த தேதிக்கு உரிய எண்களை அழுத்தவும்)<br>உதாரணம்.<br>16/04/60 என்றால் 16 என்பது உங்கள் பிறந்த நாள்<br>08/01/58 என்றால் 08 என்பது உங்கள் பிறந்த நாள் (ஒற்றை இலக்க எண்ணாக இருந்தால் முதலில் 0 சேர்க்கவும்.<br>23/06/31 என்றால் உங்கள் பிறந்த நாள் 23 |

## நான் கோரிய குடியிருப்பு பற்றிய பதிலை எப்படித் தெரிந்து கொள்வது?

ஒதுக்கீடு வழங்கப்பட்ட அனைத்து குடியிருப்புகள் பற்றிய விவரங்களும் 'Locata HOME' பத்திரிகையின் 'ஃபீட்பேக்' என்னும் பகுதியில் வெளியிடப்படும். ஒவ்வொரு குடியிருப்புக்கும் எத்தனை பேர் 'பிட்' செய்தார்கள், வெற்றி பெற்றவர்கள் எந்தப் பிரிவைச் (பேண்ட்) சேர்ந்தவர்கள், அவர்கள் பதிவு செய்த தேதி ஆகிய விவரங்கள் தெரிவிக்கப்படும். இதன் மூலம், நீங்கள் வெற்றி பெற்றவர்களின் முன்னுரிமைப் பட்டியலுடன் உங்கள் முன்னுரிமையை ஒப்பிட்டுப் பார்க்க முடியும். விரைவாக வீடு மாற வேண்டியிருந்தால், இந்த ஒப்பீட்டின் அடிப்படையில் அடுத்த முறை கோரும்போது, குடியிருப்பு வகை அல்லது குடியிருப்புப் பகுதியைத் தேர்வு செய்வதில் மாற்றம் செய்து கொள்ள முடியும்.

## ஒரு புதிய இல்லத்தைத் தேர்வு செய்து கோருவதில் ஐந்து கட்டங்கள்

**1ஆம் கட்டம்　　உறுப்பினர் ஆதல்**
தற்போது வாடகைதாரராக இருக்கும் நீங்கள் மாற்றத்துக்காகக் காத்திருக்கிறீர்கள்; தற்போது வீடற்றவராக இருக்கிறீர்கள்; தனியார் துறை இல்லத்தின் உரிமையாளரிடம் வாடகைக்கு இருக்கிறீர்கள்; வீட்டு உரிமையாளர்/குடியிருப்பவர் அல்லது நண்பர்களுடனோ குடும்பத்தினருடனோ வசிப்பவர்.

**2ஆம் கட்டம்　　பதிவு செய்தல்**
உங்கள் உறுப்பினர் பதிவை உள்ளூர் கவுன்சில் அல்லது குடியிருப்புச் சங்கம் உறுதி செய்து, நீங்கள் எந்தப் பிரிவில் வருகிறீர்கள் என்பதை எழுத்து மூலம் தெரிவிக்கும்.

**3ஆம் கட்டம்　　தேர்வு செய்தல்**
எங்கள் 'Locata HOME' என்ற இலவசப் பத்திரிகையை பொது இடங்கள் பலவற்றிலிருந்து நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் தேர்வு செய்த குடியிருப்பைக் கோருவதற்காக இந்தப் பத்திரிகையில் உள்ள கூப்பனையோ, எஸ்எம்எஸ் செய்தியையோ அல்லது இணையத் தளத்தையோ பயன்படுத்தலாம்.

**4ஆம் கட்டம்　　ஒதுக்கீடு செய்தல்**
நீங்கள் தேர்வு செய்து அளித்த கோரிக்கை, அந்தப் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றால், உங்கள் உள்ளூர் கவுனசில் அல்லது குடியிருப்புச் சங்கம் உங்களைத் தொடர்பு கொள்ளும்; அந்தக் குடியிருப்பை நீங்கள் பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்யும்.

**5ஆம் கட்டம்　　பதில் பெறுதல்**
'Locata HOME' இதழில், அதற்கு முந்தைய இதழ்களில் எத்தனைபேர் குடியிருப்புகளுக்கு விண்ணப்பம் செய்தார்கள் என்ற விவரங்கள் வெளியிடப்படும்.

## வீட்டுவசதிக்காக வேறு என்ன வாய்ப்புகள் உள்ளன?

மேற்கு லண்டனில் குடியிருப்புகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது; எனவே இந்தத் திட்டம் எல்லாருடைய குடியிருப்புப் பிரச்சினைகளையும் தீர்த்துவிட இயலாது. பெரும்பாலான உறுப்பினர்கள் மறுகுடியிருப்புப் பெறுவதற்கு நீண்டநாள் காத்திருக்க வேண்டியிருக்கலாம்; சி மற்றும் டி பிரிவில் உள்ள பெரும்பாலான உறுப்பினர்கள் அவர்களின் பகுதியிலேயே மறுகுடியிருப்புப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும். மக்களுக்கு மேலும் அதிக வாய்ப்புகள் வழங்குவதற்காக லண்டனுக்கு வெளியே உள்ள பகுதிகளில் - உதாரணமாக அதிக டிமாண்ட் இல்லாத மிட்லேண்ட்ஸ் போன்ற பகுதிகளில் கிடைக்கிற வீடுகள் குறித்தும் விளம்பரங்கள் வெளியிடுவோம். அதேபோல, மேற்கு லண்டனில் வீட்டு உரிமைகள் பகிர்வின்கீழ் கிடைக்கிற குடியிருப்புகள் பற்றிய விளம்பரங்களும் வெளிவரும். தனியார் வாடகைக்கு விடுகிற குடியிருப்புகள் பற்றிய விளம்பரங்களும் 'Locata HOME' பத்திரிகையில் அறிமுகம் செய்யப்படுகின்றன.

| உரிமையாளர் தொடர்பு விவரங்கள் | | தொலைபேசி எண்கள் |
|---|---|---|
| லண்டன் பரோ ஆஃப் பிரென்ட் | | |
| (London Borough of Brent) | | 020 8937 2000 |
| Mahatma Ghandi House | | |
| 34 Wembley Hill Road | | |
| Wembley, Middlesex | | |
| HA9 8AD | | |
| | | |
| லண்டன் பரோ ஆஃப் ஈலிங் | | |
| (London Borough of Ealing) | | 020 8825 7274 |
| Housing Resource Centre | | |
| Town Hall Annexe | | |
| New Broadway | | |
| London | | |
| W5 2BY | | |
| | | |
| லண்டன் பரோ ஆஃப் ஹார்ரோ | | |
| (London Borough of Harrow) | குடும்பப் பெயர்கள் | |
| Youngmans 2 Building | A முதல் Cg | 020 8424 1116 |
| PO Box 65 | Ch முதல் G | 020 8863 5611 இணைப்பு 3870 |
| Civic Centre | H முதல் Lg | 020 8424 1706 |
| Station Road | Lh முதல் O | 020 8424 1115 |
| Harrow, Middlesex | P முதல் Sg | 020 8863 5611 இணைப்பு 3738 |
| HA1 2XG | Sh முதல் Z | 020 8863 5611 இணைப்பு 3663 |
| மின்அஞ்சல்: locatahelp@harrow.gov.uk | | |
| | | |
| லண்டன் பரோ ஆஃப் ஹில்லிங்டன் | | |
| (London Borough of Hillingdon) | | 01895 250 328 |
| Housing Services | | 01895 277 779 |
| Civic Centre | | 01895 250 147 |
| High Street | | 01895 250 389 |
| Uxbridge, Middlesex | | |
| UB8 1UW | | |
| மின்அஞ்சல்: nmailbox@hillingdon.gov.uk | | |
| | | |
| லண்டன் பரோ ஆஃப் ஹவுன்ஸ்லோ | | |
| (London Borough of Hounslow) | | 020 8583 3815 |
| The Civic Centre | | 020 8583 4405 |
| Lampton Road | | |
| Hounslow | | |
| TW3 4DN | | |
| | | |
| ஈலிங் ஃபேமிலி ஹவுசிங் அசோசியேஷன் | | |
| (Ealing Family Housing Association) | | 020 8621 9898 |
| St James House | | |
| 105-113 Broadway | | |
| West Ealing | | |
| London | | |
| W13 9BE | | |
| மின்அஞ்சல்: csc.queries@chq.org.uk | | |

பாரடைம் ஹவுசிங் குரூப்
(Paradigm Housing Group) 0845 845 5517
1 White Hill
Chesham
Bucks
HP5 1AB

பிசிஎச்ஏ ஹவுசிங் அசோசியேஷன்
(PCHA Housing Association) 020 8537 4537
324 Harrow Road
London
W9 2HP